பக்கங்கள்: ஆறு

Registered a as News paper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 ஆவணி 10 சனிக்கிழமை (26-08-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 274

# கொழும்பு மர்மக் கொலைகளின் பின்னணியில் அதிரடிப் படையினர்

## இராணுவ முகாம்கள் முற்றுகை 20 பேர் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஓகஸ்ட் 26

தெற்கில் அண்மைக்காலமாக ஆறுகளில் இருந்து மீட்கப்பட்ட — தமிழர்களுடையவை எனச் சந்தேகிக்கப்படும் — மர்மச் சடலங்களுடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் இருபது விசேட அதிரடிப் படையினர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் கொட்டக தெனிய தலைமையில் சுமார் முந்நூறு பேர் கொண்ட பொலிஸ் கோஷ்டியினர் விசேட அதிரடிப்படை முகாம்களை ஒரே சமயத்தில் முற்றுகையிட்டு இவர்களைக் கைது செய்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் உள்ள விசேட அதிரடிப்படையினரின் தலைமையகம் ஹேனஹென விசேட அதிரடிப்படை முகாம் மற்றும் கண்டியில் உள்ள விசேட அதிரடிப் படை இன்ஸ்பெக்டர் ஒருவரின் இல்லம் ஆகிய மூன்று இடங்களுமே பொலிஸாரின் திடீர் முற்றுகைக்கு உட்பட்டன.

ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்கு தகவல் பரவுவதைத் தடுக்கும் நோக்கில் இந்த மூன்று இடங்களையும் ஒரே சமயத்தில் சுற்றிவளைத்த பொலிஸார் இன்ஸ்பெக்டர் உட்பட இருபது விசேட அதிரடிப் படையினரைக் கைது செய்தனர். ஐந்து ஜீப் வண்டிகளையும் பொலிஸார் கைப்பற்றினர்.

அண்மைக் காலத்தில் ஆறுகளில் இருந்து மீட்கப்பட்ட சடலங்கள் தலைநகர் கொழும்பில் மர்மமான முறையில் கடத்திச் செல்லப்பட்ட தமிழர்களுடையவை எனச் சந்தேகிக்கப்படுகிறது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 30 சிங்கள அமைப்புக்கள் எதிர்ப்பு இயக்கம் நடத்தும்

கொழும்பு, ஓக. 26

அரசாங்கம் வெளியிட்டுள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் இயக்கம் ஒன்றை நடத்த கொழும்பில் உள்ள சுமார் 30 சிங்கள பௌத்த அமைப்புகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

தீர்வு யோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரசுக்குச் சமர்ப்பிக்கவுள்ள மகஜர் ஒன்றுக்கு கையெழுத்து சேகரிக்கும் வைபவம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கொழும்பு ஸ்ரீதர்ம மாவத்தையில் உள்ள ஆனந்த ராமய விகாரையில் நேற்று மாலை இந்த வைபவம் இடம் பெற்றது.

பௌத்த பிக்குகள் பெரும் எண்ணிக்கையில் கூடி ஏற்பாடுகள் குறித்துக் கலந்துரையாடினர். (இ-ஐ-6)

## ஐந்து அதிவேகப் படகுகள் கடற்படைக்கு வருகின்றன

கொழும்பு, ஓக. 26

கடற்படைக்கு புதிதாக ஐந்து போர்ப் படகுகள் வாங்கப்படவுள்ளன.

அதிவேகத் தாக்குதல் படகுகள் நான்கும், "சப் ஷேசர்" வகைப் பீரங்கிக் கப்பல் ஒன்றும் கொள்வனவு செய்யப்படும் என்று பாதுகாப்பு வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

புதிய போர்ப் படகுகள் கொள்வனவுக்காக வெளிநாடு சென்றிருந்த கடற்படை அதிகாரிகள் இவ்வாரத்தில் நாடு திரும்புவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா கடற்படை விடுதலைப் புலிகளிடம் பறிகொடுத்த போர்க் கலன்களுக்குப் பதிலாகவே புதியன

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் பிரச்சினையைத் தீர்க்க செஞ்சிலுவை மீண்டும் முயற்சி

### நேற்று மற்றும் ஒரு யோசனை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 26

வடக்கே வரும் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்குவது தொடர்பாக யோசனை ஒன்றை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு நேற்றுக் காலை அரசிடம் சமர்ப்பித்துள்ளதாக கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

இந்த விவகாரம் குறித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஏற்கனவே சமர்ப்பித்த மூன்று கோரிக்கைகளையும் அரசு நிராகரித்திருந்தது.

நேற்று சமர்ப்பிக்கப்பட்ட புதிய யோசனை குறித்து அரசு எந்த முடிவையும் நேற்று மாலை வரை வெளியிடவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## பெண் உட்பட நால்வர் படையினரால் விடுவிப்பு!

வடமராட்சி, ஓக. 26

பலாலியில் படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் நால்வர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

கடந்த 9ஆம், 10ஆம் திகதிகளில் கள் இறக்கச் சென்ற சமயம் படையினரிடம் பிடிபட்ட பண்டத்தரிப்பு பாத்திமா கோவிலடியைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் டேவிட் [வயது 47], இரத்தினம் யேசுதாஸ் [வயது 49]—

கடந்த ஜூலை மாதம் 18ஆம் திகதி வீட்டில் பொருள்கள் எடுத்துவரச் சென்ற அளவெட்டியைச் சேர்ந்த அப்புத்துரை பாலச்சந்திரன் [வயது 33]—

அச்சுவேலியில் படையினரிடம் சிக்கிய அச்சுவேலி விக்கினேஸ்வரா வீதியைச் சேர்ந்த இளையதம்பி விஜயலட்சுமி என்ற சித்தசுவாதீனமற்ற பெண் ஆகிய நால்வருமே நேற்று விடுவிக்கப்பட்டவர்களாவர்.

இவர்கள் நால்வரும் 'ஹபரண' கப்பல் மூலம் நேற்று பருத்தித்துறைக்கு அழைத்து வரப்பட்டு செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவினரால் அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பலாலியில் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டுள்ள 39 பேரில் மேலும் சிலர் அடுத்தமாத நடுப்பகுதியில் விடுவிக்கப்படுவர் எனத் தெரியவருகிறது. [ஐ-173]

## ஒரு தொகுதி மருந்து வகை நேற்று வந்து சேர்ந்தது

கொழும்பு, ஓக. 26

யாழ். போதனா வைத்திய சாலை மற்றும் யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களம் என்பன வற்றுக்கு மூன்றாம் காலாண்டுக்கான ஒரு தொகுதி மருந்து வகைகள் நேற்று 'ஹபரண'' கப்பலில் வந்து சேர்ந்தன.

தடுப்பூசி மருந்து வகைகளும் அவற்றில் அடங்கும்.

மருந்து வகைகள் வந்து சேர்ந்துள்ளதை அடுத்து அரசினர் ஆஸ்பத்திரிகளில் நிலவி வந்த மருந்து தட்டுப்பாடு ஓரளவு நீங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-4)

## மட்டக்களப்பில் 12 தமிழர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 26

மட்டக்களப்பு நகரில் கடந்த சனியன்று படையினர் நடத்திய தேடுதலின் போது 12 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். [இ-3]

# யாழ். மக்கள் அவலநிலை குறித்து ஐ.நாவுக்கு விவரமாக அறிக்கை

## நேற்று இங்கு வந்த ஐ.நா. அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், ஓக. 26

"யாழ். மாவட்ட மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள், உணவுத் தட்டுப்பாடு, மக்களின் அவல வாழ்க்கை ஆகியன குறித்து விவரமான அறிக்கை ஒன்றை ஐ. நா. சபையில் சமர்பிக்கவிருக்கிறேன்"

நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த ஐ. நா. அபிவிருத்தி திட்டமனிதாபிமான விவகாரங்களுக்கான ஆலோசகரும், இணைப்பாளருமான றோலண்ட் ஹட்சன் மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வந்த அவரை 'உதயன்' செய்தியாளர் சந்தித்து இன்றைய நிலையில் யாழ். விஜயம் மேற்கொண்டதன் நோக்கம் குறித்து கேட்டபோதே அவர் இப்படித் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டுக்கு சுமார் இரண்டு மாத காலமாக உணவுக் கப்பல்கள் வராத காரணத்தால் இங்கு ஏற்பட்டுள்ள மோசமான நிலை

[6 ஆம் பக்கம் பார்க்க]




**UNIKCO COMPUTER CENTRE**

**புதிய பிரிவுகள்**

★ BASIC ★ PASCAL
★ LOTUS 1-2-3
★ D BASE III PLUS
★ WORD STAR

**28-08-1995 ஆரம்பம்**
வார நாள் வகுப்புகள்

**27-08-1995**
வார இறுதி வகுப்புகள்

★ மேலும் 31-08-1995 வியாழக்கிழமை 2-5 மணிவரை DOS வகுப்புகள் இலவசமாக நடாத்தப்படும்.
★ Printing தமிழ், ஆங்கிலம் செய்து கொடுக்கப்படும்.
★ Computer திருத்திக் கொடுக்கப்படும்.
★ Computer விற்பனைக்கு உண்டு.

மேலதிக விவரங்களுக்கு:

37, Clock Tower Road, JAFFNA.
60, Vidanes Road, Chundikuli.

[சி-2110]

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி

**G. C. E. Advanced Level ஆண்டு - 12**

**தொண்டைமானாறு வெளிக்களப் பரீட்சைகள்**

திங்கள் 28-07-95 தொடக்கம் தற்காலிகமாக 464, ஆஸ்பத்திரி வீதியில் உள்ள பட்டதாரிப் பிரிவில் நடைபெறும். மாணவர்களும், உயர்தர வகுப்பு ஆசிரியர்களும் இன்று 8-30 மணிக்கு சமூகம் தரவும்.

— அதிபர்.

25-08-95 (சி-2112)

**31-ம் நாள் நினைவஞ்சலி**

ஆண்டவன் படைப்பு: 26 - 09 - 1986



அன்னியன் அழிப்பு: 27 - 07 - 1995

செல்வி
**சிவலோகநாதன் குணாழினி**

எங்கள் நினைவில் நீங்காத அன்புடனும், பாசத்துடனும் வாழ்ந்த தெய்வமே! உமது ஆன்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

26-08-95 சனிக்கிழமை எமது அன்புச் செல்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், வீட்டுக்கிருத்தியமும், மதியபோசனமும் கைதடி தெற்கில் உள்ள எமது தற்காலிக இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர்கள் தயவுசெய்து பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்;
தாய், சகோதரர்,
உற்றார், உறவினர்.
(ஐயனார் கோவிலடி சுன்னாகம்)

தற்காலிக முகவரி:
சோ. சண்முகராசா
C/o இ. இராமமூர்த்தி,
"திருவடி நிழல்"
கைதடி தெற்கு.
கைதடி.

[38220]


# ஆந்திராவின் தெலுங்கு தேசம் பிளவு

## ராமராவின் மருமகன் தலைமையில் போட்டிக் கட்சி

புதுடில்லி, ஓக. 26

இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தில் ஆளும் தெலுங்கு தேசம் கட்சி பிளவு பட்டு விட்டது.

மாநில வருவாய்த்துறை அமைச்சர் என். சந்திரபாபு நாயுடு பிரிந்து சென்ற தெலுங்கு தேசம்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

முதலமைச்சர் என்.டி ராமராவின் மருமகனான சந்திரபாபு நாயுடு, சட்டசபையில் தமக்கு 140 எம். எல். ஏக்களின் ஆதரவு இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

ஆந்திரப் பிரதேச சட்டசபையை கலைத்து விடுமாறு முதலமைச்சர் என். டி. ராமராவும் —

கலைக்க வேண்டாம் என சந்திரபாபு நாயுடு தலைமையிலான போட்டிக் குழுவினரும் கேட்டுள்ளனர்.

சட்டசபையைக் கலைக்கும் முடிவை மாநில அமைச்சரவை எடுத்த பின் ராமராவ் ஆளுநரை நேற்றுக் காலை சந்தித்தார்.

அதேசமயம் பிரிந்து சென்ற போட்டிக் குழுவின் அமைச்சர்கள் இருவரும் ஆளுநரை நேற்றுக் காலை சந்தித்தனர்.

சட்டசபையைக் கலைக்க வேண்டாம் என்று கோரும் 140 எம் எல்.ஏக்கள் கையெழுத்திட்ட தீர்மானத்தின் நகல் ஒன்றையும் அவர்கள் ஆளுநரிடம் சமர்ப்பித்தனர்.

(இ-எ)

## மிருசுவில் பிரசவ விடுதி உணவில் புறா எச்சம்!

தென்மராட்சி, ஓக. 26

மிருசுவில் அரச பிரசவ விடுதியில் தங்கியுள்ள பிரசவ தாய்மாருக்கு வழங்கும் உணவில் புறா எச்சம் தினமும் காணப்படுவதாக புகார் கூறப்படுகிறது.

இதனால் பிரசவத் தாய்மார்கள் தங்களுக்கு வழங்கப்படும் உணவைப் பெற்றுக் கொள்ள தயக்கம் காட்டி வருகின்றனர்.

பிரசவ விடுதியின் சமையல் அறைக் கூரையில் புறாக்கள் தங்கியிருப்பதால், அவற்றின் காய்ந்த எச்சங்கள் உணவில் விழுந்து விடுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என பிரசவத் தாய்மார் எதிர்பார்க்கின்றனர்.

## நல்லூர் சூழலில் இன்று

நல்லூர் ஸ்ரீ கந்தசாமி கோயில் வருடாந்த உற்சவத்தின் பூங்காவனத் திருவிழாவான இன்று ஆலயச்சூழலில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள்.

★ நாவலர் மணி மண்டப முன்றலில் — மாலை 6 மணி முதல் 7 மணி வரை - சமயச் சொற்பொழிவு திரு. எஸ். சத்தியமூர்த்தி 7 மணிமுதல் 8-30 மணிவரை திரு. பொன். சுந்தரலிங்கம் - பாட்டு

★ நல்லை ஆதீன குருமூர்த்த ஆலயத்தில் — பி ப 3-00 மணிக்கு சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கத்தின் சமயப்பேருரை — "திருமந்திரம்"

★ மேற்குவீதியில் ஸ்ரீமுத்து விநாயகர் ஆலயமண்டபத்தில். —

★ மாலை 5-30 மணிக்கு பிரம்ம ஸ்ரீ வை. நித்தியானந்த சர்மாவின் "விஷ்ணுபாகவதம்" தொடர் இசைப் பேருரையில் "குசேலர்"

(ஒ-30-111)

# வவுனியா நகரில் 40 பேர் கைதாகினர்

வவுனியா சுந்தானந்த இந்து இளைஞர் அகத்தில் தங்கியிருந்த சுமார் 40 க்கும் மேற்பட்டவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை காலை விசாரணைக்கென பொலிஸாரால் கூட்டிச் செல்லப்பட்டனர் இவர்களில் பத்துக்கும் மேற்பட்டோர் பெண்கள் ஆவார்.

வடபகுதியில் இருந்து வவுனியா வந்து பொருள்களைக் கொள்வனவு செய்வோர் திரும்பிச் செல்ல முடியாத நாள்களில், மேற்படி சங்கத்தில் தங்கியிருப்பது வழக்கம்.

கைது செய்யப்பட்டவர்கள் புலிகள் இயக்கத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரிக்கப்பட்டு வருகின்றனர். (ஒ)

## சீமெந்து ஊழியர் சம்பளம்

சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களின் ஜூலை மாதச் சம்பளம் திங்கட்கிழமை முதல் யாழ்ப்பாணம், நாவலர் வீதியில் அமைந்துள்ள கூட்டுத்தாபனத்தின் தற்காலிக காரியாலயத்தில் வழங்கப்படவுள்ளதாக கூட்டுத்தாபனத்தின் கணக்காளர் திரு க. மகேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஒ)

## புலிகளின் குரல் வானொலியில்

**26-08-1995**
**சனி இரவு**

★ 8-02 — புரட்சிக்குரல்
★ 8-05 — நிகழ்வும் பகிர்வும்
★ 8-20 — நேயர்கடிதங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — கவியரங்கம் "கையேந்தி நிற்பதுவோ களம்காண விரைவோம்"

**27-08-1995**
**ஞாயிறு காலை**

★ 7-02 — காவிரணக்கம்
★ 7-15 — களத்தில் மலர்ந்தவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-45 — களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

**சனி மாலை**

★ 5-01 — சிந்தனைச்சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — வேங்கையின் நெஞ்சம்
★ 5-30 — அறிவியல் வினாடி — வினா
★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 6-02 — என் தெரிவு
★ 6-10 — செய்திகள்
★ 6-15 — பாமாலை


**இரட்சிப்பின் சத்தம் சபை**
**SOUND OF SALVATION CHURCH**

மேற்படி கிறிஸ்தவ சபையில் வாரந்தோறும் ஞாயிறு காலை 9.00 மணிமுதல் நண்பகல் 1.00 மணி வரை தெய்வீக சுகமளிக்கும் ஆராதனை நடைபெற்று வருகின்றது யாவரும் பங்குபற்றி தேவ ஆசிர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளும்படி அழைக்கின்றோம்.

இரட்சிப்பின் சத்தம்.
கச்சாய் வீதி, சாவகச்சேரி
196/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

[38223]


## முக்கிய அறிவித்தல்

இன்று சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் யாழ். வணிக ஊழியர் சழகத்தின் முக்கிய கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் விடுதலை புலிகள் இயக்க பிரமுகர்களும் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள். அனைத்து ஊழியர்களும் தவறாது கலந்து கொள்ளவும்.

நிர்வாகம்
வணிக ஊழியர் கழகம்
யாழ்ப்பாணம்.

(சி-2114)

## IN MEMORIAM

A requiom mass will be offered by St. Patrick's College at 11 a. m. on 28-08-95 at St. Mary's Cathedral, Jaffna, for the repose of the soul of Rev. Fr. John Mary, former Prefect of Studies.

— Rector.

(சி-2113)

## புலிகளின் மண்டைதீவுத் தாக்குதல்;

# 5 அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க இராணுவ நீதிமன்றம் ஆலோசனை

கொழும்பு, ஓக. 26

இராணுவத்தினருக்குப் பேரழிவை ஏற்படுத்திய மண்டைதீவு முகாம் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதலின் போது தாக்குதலுக்கு முகம் கொடுக்கத் தவறிய முகாம் கட்டளை அதிகாரிகள் ஐவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று இது தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட இராணுவ நீதிமன்றம் ஆலோசனை தெரிவித்துள்ளது.

இந்த நீதி மன்றத்தில் மேஜர் ஜெனரல் ஏ. எம். யு. செனவிரத்ன தலைமையில், பிரிகேடியர் அன்ரன் விஜேந்திரா, பிரிகேடியர் நந்த மல்லவராச்சி ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

மண்டைதீவு முகாம் தகர்ப்புப் பற்றி விசாரணை நடத்திய இந்த நீதி மன்றம், முன்னணிக் காவலரணில் பணியாற்றிய உபாலி லியனகே என்ற சிப்பாயின் செயல்பாடுகளை மெச்சி அவருக்கு விருது வழங்க வேண்டும் என்றும் சிபாரிசு செய்துள்ளது.

தாக்குதல் நடைபெறப் போவது பற்றி ஏற்கனவே படை அதிகாரிகளுக்குத் தெரிந்திருந்தது.

எனினும் அவர்கள் அது பற்றி அக்கறை கொள்ளாமல் தங்களது வசதி வாய்ப்புகள் பற்றியே அக்கறை கொண்டிருந்தனர்.

தொண்டர் படைப் பிரிவான 10 ஆவது படைமுனு படைப் பிரிவிடம் முகாமின் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது சரியான செயல் அல்ல.

விடுதலைப் புலிகளுடன் எதிர்த்து போரிடுவதன்றி, அவர்களிடம் இருந்து தப்பி ஓடுவதே இராணுவத்தினரின் முக்கிய குறிக்கோளாக இருந்தது.

★ தாக்குதல் இடம் பெற்ற போது இராணுவத்தினரில் பலர் அங்கு இருக்கவில்லை.

★ பாதுகாப்புப் பிரதேசத்தின் சில இடங்களில் முட்கம்பி போதுமானதாக அடிக்கப்படவில்லை.

★ இராணுவத்தினரிடம் இருந்த கிளைமோர் நிலக்கண்ணி வெடிகள் பயன்படுத்தப்படவில்லை.

★ எதிர்த் தாக்குதல் நடத்துவதற்கு, பலாலியில் இருந்து தாக்குதல் விமானங்கள் அனுப்பப்பட வில்லை.

★ 20 மி.மி. துப்பாக்கிகள் தாக்குதல் நடைபெற்றதற்கு மறு நாள் காலையே பயன்படுத்தப்பட்டுள்ளன.

★ வானங்களை அப்புறப்படுத்துவது தொடர்பாக தலைமையகத்தினால் அனுப்பப்பட்ட பணிப்புரைகள் பின்பற்றப்படவில்லை.

இவ்வாறு இராணுவ நீதிமன்றம் இந்த ஐவர் மீதும் குற்றம் சாட்டியுள்ளது. (எ-10)

# வாவிகளில் சடலங்கள்: 15 பேர் கைதாகினர்!

கொழும்பு மற்றும் பகுதியில் வாவிகளில் இருந்து சடலமாக மீட்கப்பட்டவர்களின் கொலைகளுக்குக் காரணமானவர்கள் எனக் கருதப்படும் சந்தேகநபர்கள் 15 பேரை நேற்று முன்தினம் பொலீஸார் கைதுசெய்தனர் என அறிவிக்கப்பட்டது.

இந்தக் கொலைகள் குறித்து விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்த பணிப்புரையை அடுத்தே சந்தேக நபர்களை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

இதேவேளை, வாவிகளில் மிதந்த சடலங்கள் தொடர்பாக 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பிரதிப் பொலீஸ் மா அதிபர் கொட்டகதெனிய நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (ஒ-3)

## சடலங்களை எடுத்துச் செல்ல பாவித்த

# 5 ஜீப் வாகனங்களை சி.ஐ.டியினர் கைப்பற்றினர்

மர்மமான முறையில் கடத்திச் செல்லப்பட்டவர்களின் சடலங்களை தியவன்ன ஓயாவுக்கு கொண்டு செல்ல பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் ஐந்து ஜீப் வண்டிகளை சி. ஐ. டி பகுதியினர் கைப்பற்றியுள்ளனர்.

அரசாங்க பகுப்பாய்வாளர் வழங்கிய தகவலை அடுத்து இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கோட்டே தியவன்ன ஓயாவில் கண்டெடுக்கப்பட்ட சடலங்கள் தொடர்பான விசாரணையில் இச் சம்பவம் முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது

கைப்பற்றப்பட்ட ஜீப் வண்டிகள் விசாரணைக்காக வெலிக்கடை பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவரிடம் இருந்து தங்க மோதிரம் ஒன்றை சி. ஐ. டியினர் மீட்டுள்ளனர்.

அந்த மோதிரம் கொலை செய்யப்பட்ட தமது கணவருக்குச் சொந்தமானது என இறந்தவர் ஒருவரின் மனைவி அடையாளம் கண்டுள்ளார்.

## திருமலை வீதிகளில் செல்லும்

# இளம் வயதினரை வீடியோ படம் எடுக்கும் படையினர்!

கொழும்பு, ஓக. 26

திருமலையில் வீதியால் செல்லும் இளைஞர்கள், யுவதிகள் பலவந்தமாகக் கூட்டிச் செல்லப்பட்டு முகமூடி மனிதர் முன் நிறுத்தப்படுகின்றனர். பின்னர் வீடியோ எடுக்கப்பட்ட பின் அவர்கள் விடுவிக்கப்படுகின்றனர்.

புதிய பாணியில் இந்தப் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக கொழும்பு வார இதழ் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதனால் திடீர் திடீர் எனக் காணாமல் போகும் தங்கள் பிள்ளைகளை தினமும் பெற்றோர்கள் தேடி அலைவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [ஐ-எ)

# வலி. மேற்குப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து அவலம்

வட்டுக்கோட்டை, ஓக. 26

வலி. மேற்கில் உள்ள அராலி, வட்டுக்கோட்டை' சுழிபுரம் முதலிய பிரதேசங்களின் மக்கள் தொடர்ந்து இடம் பெயர்வதும் மீண்டும் திரும்பிவருவதுமாக அவலப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

பல குடும்பத்தினர் தமது பொருள்களை வேறு இடங்களுக்கு நகர்த்தியுள்ளார்கள். அத்துடன் இரவு வேளைகளில் வேறு இடங்களுக்குச் சென்று தங்குவது, பகலில் தமது வீடுகளுக்குச் சென்று பார்ப்பது என்ற வகையில் அவர்கள் வாழ்கின்றார்கள்.

இந்த நிச்சயமற்ற நிலைமையால் ஆடு மாடுகள் கோழிகள் பராமரிப்பாளர் இன்றி இருக்கின்றன. அதே வேளை அவை குறைவான விலையில் சந்தைக்கும் வரத் தொடங்கியுள்ளன. (க-161)

# பொருண்மிய நிறுவன கடனுதவி

வலிகாமம், ஓக. 26

வேளாண்துறை மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர், கோப்பாய் வட்டத்தைச் சேர்ந்த முயற்சியுள்ள ஆறு பயனாளிகளுக்கு கடன் அடிப்படையில நீரிறைக்கும் இயந்திரங்களை அண்மையில் வழங்கியுள்ளனர்.

மேற்படி நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக்குழுப் பகுதியினரால் நடைமுறைப் படுத்தப்படும் கிராமிய நிதியத்தினூடாக ஒவ்வொரு பயனாளிக்கும் 25 ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில் ஒன்றரை லட்சம் ரூபா வரையான கடன் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (க-152)

# கிறிஸ்தவ பிரார்த்தனை மண்டபம்

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் கிறிஸ்தவ பிரார்த்தனை மண்டபம் ஒன்று அமைக்கப் படவுள்ளது.

இதற்கான வேலைகளை பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை நிர்வாகத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறை கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபை மேற்கொண்டு வருகிறது. (ஓ-173)

# இடம்பெயர்ந்த மக்கள் வீடுகளில் திருட்டு

அண்மையில் இடம் பெற்ற முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கைகளால் மக்கள் இடம் பெயர்ந்த சுந்தரோடை, சுன்னாகம் பகுதிகளில் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன.

இரவு நேர வேளைகளில் வீடுகள் உடைக்கப்பட்டு, பெறுமதியான பல பொருட்கள் தினமும் திருடப்பட்டு வருவதாக புகார் செய்யப் பட்டுள்ளது. (ஒ-152]

# மர்மக் கொலைக் கும்பலின் வதைமுகாம் கொழும்பில்

## சிங்களப் பத்திரிகைக்கு தகவல்

கடத்திச் செல்லப்பட்டு வதைக்கப்பட்ட பின்னர் கொல்லப்பட்டு சடலங்களை ஆறுகளிலும் நீர் நிலைகளிலும் போடும் மர்மக் கொலைக் கும்பலின் இரகசிய வதை முகாம் ஒன்று கொழும்பு நகரில் செயற்படுவதாக கிடைத்த தகவல்களை அடுத்து பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக "திவுமின" எனும் சிங்கள ஞாயிறு இதழ் தெரிவிக்கிறது.

இந்தக் கொலைக் கும்பலால் தமிழர்கள் கடத்தப்பட்டு கொலை செய்யப்படுகிறார்கள் எனத் தெரிவிக்கும் கடிதங்களும் மனுக்களும் பொலீஸாருக்குக் கிடைத்துள்ளன.

இவ்வாறு கடத்தப்பட்டுக் கொலை செய்யப்படுவோர் தமிழ் இளைஞர்களாய் இருப்பதால் இக் கொலைகளின் பின்னணியில் ஏதாவது ஒரு தமிழ் குழு செயற்படலாம் எனப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

சடலங்களை ஏற்றிச் சென்று நீர் நிலைகளில் போடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் விவரங்களை வைத்து விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டுவருவதாகவும் பொலீஸாரோ பாதுகாப்புத் துறையினரோ நுழைய முடியாத ஓர் இடத்தில் இக் கொலைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

சில நாட்களுக்கு முன்னர் தியவன்ன வாவியில் 5 சடலங்கள் கண்டெடுக்கப்பட்ட பின்னர் இக் கொலைக் குழு செயற்படாதிருந்தது எனவும் ஆனால் இக் குழு மீண்டும் தனது செயற்பாட்டை ஆரம்பித்துள்ளது எனவும் மூத்த பொலீஸ் அதிகாரி ஒருவர் 'திவுமின'வுக்குத் தெரிவித்துள்ளாராம் [க-10]

# தமிழீழ பாதுகாப்பு நிதிக்கு பணம் வழங்க கடனுதவி

தமிழீழ பாதுகாப்பு நிதிக்கு பணம் வழங்குவதற்கென இன்பருட்டி கிராம சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம் தனது அங்கத்தவர்களுக்கு கடன் வழங்க முன் வந்துள்ளது.

இச் சங்கம் கடந்த வெள்ளி இரவு பருத்தித்துறையில் நடைபெற்ற பரப்புரைக்கூட்டத்தில் வைத்து 50 ஆயிரம் ரூபாவை தமிழீழ நிதிப் பொறுப்பாளர் திரு. செ. தமிழேந்தியிடம் வழங்கியிருந்தது

இன்பருட்டி கிராமத்தில் தமிழீழ பாதுகாப்பு நிதி செலுத்த வசதியற்றோருக்கு உதவுமுகமாக, அவர்களுக்கு இதற்குரிய நிதியைக் கடனாக மேற்படி சங்கம் வழங்கும் என இச் சங்கத்தின் செயலாளர் திரு. செ. சூரியகுமார் தெரிவித்துள்ளார். (ஒ-173)



## பூங்காவனம்

ராகம்: பிருந்தாவன சாரங்கா தாளம்: ஆதி

வள்ளி மணவாளனுக்குப் பூங்காவனம் - நல்ல
வண்ண மயில் வேலனுக்குப் பூங்காவனம் (வள்ளி)
அணிப் பொன் முத்து மாணிக்கம் வைரம்
அவை தொங்க அசைந்தாடுமே! - ஊஞ்சல்
அழகாக இசைந்தாடுமே!
பன்னீரின் வாசம் விண்மீன்கள் கோலம்
பழகாத பூங்காவனம்! - இது
அழகான பூங்காவனம்! (வள்ளி)
மாலாதி, தேவர் மணங்காண வந்தார்
மணமாலை இவள் சூட்டுவான் - தினைப்
புனமாது தலை நீட்டுவாள்!
பாவாணர் வாழ்த்துக் கவிபாடி நின்றார்
பருகாத செவியில்லையே! - முருகா
உருகாத மனமில்லையே! (வள்ளி)
மேளம் முழங்கும்; நாதஸ்வரங்கள்
வெகுதூரம் வரைகேட்குமே! - நல்லூர்
விண்ணாட்டை நினைவூட்டுமே!
ஈழம் மயங்கும் மணநாள் இந்நாளே
இந்நாள் பொன்னாளாகுமே! - முருகன்
தன்னோடெம் உளம் ஏகுமே! (வள்ளி)

— சோ. பத்மநாதன்.

## கலியாணத் திருக்கோலம்

ராகம்:- சண்முகப்பிரியா தாளம்:- ஆதி

பல்லவி

கல்யாணத் திருக்கோலம் காண்போமின்றே - திருக்
கல்யாணத் திருக்காட்சி காண்போம் நன்றே - கந்தன் [கல்யா]

அனுபல்லவி

முருகோனின் இடப்புறத்தில் கோன்மகளும் - நல்லை
முருகேசன் வலப்புறத்தில் மான்மகளும் - அணையும்

சரணம்

இருகண்ணின் பலன்கொள்ள நல்லை செல்வோம் - எம்
இருகாதின் நலன்காண நல்லை செல்வோம் - சுற்றும்
இருகாலின் பயன் கொள்ள நல்லை செல்வோம் -கூப்பும்
இருகையின் பலன் வெல்ல நல்லை செல்வோம்-குனிந்
தன்மத்தின் பகைவெல்ல நல்லூர் செல்லுவோம் -வளர்
கன்மப் பகையை வெல்ல நல்லூர் செல்லுவோம் - இந்த
ஜென்மத்தின் பயன்கொள்ள நல்லூர் செல்லுவோம் - தொடர்
ஜென்மப் பகையை வெல்லநல்லூர் செல்லுவோம்-ஐயனின் [கல்யா]

—முருகு.

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் Portable ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் ('Optima', 'Erica', 'Olivetti', 'Underwood' உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். வே. செல்வ ஜோதி, நீதன்நகர், 63, வில்லியம் வீதி, நாவாந்துறை. (38196)

புத்தம் புதிய Suntec Solar [Australian] Model St 30 (30W) விற்பனைக்குண்டு. தொடர்பு: 123, பருத்தித் துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (இந்து விடுதி முன்பாக) (38188)

அழகிய பொமரேனியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. முகவரி: எஸ். புஷ்ப நாயகம், "புதுவளவு", பருத்தித்துறை வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய். (நாவலர் பாடசாலைக்கு அருகில்) (38206)

### தேவை

புதிய திருமண சேவை நிலையத்துக்கு காலையில் மட்டும் வேலைசெய்யக்கூடிய சிறிய பெரிய எழுத்துக்களை அழகாக எழுதக்கூடிய லிகிதர்/செயலர் தேவை. கிளை நிலையத்து இடவசதி தருபவருக்கு சலுகையுண்டு. கிளை கல்வியங்காடு, இருபாலை, கோப்பாய் பகுதி விரும்பத்தக்கது. 31-8-95க்கு முன்னர் விண்ணப்பிக்கவும், இல. 829, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (38202)

பாவித்த நல்ல நிலையில் உள்ள அலுவலக, வீட்டுத் தளபாடங்கள், வாங்குகள், உரல் உட்பட தேவை. அளவு, விலை விவரத்துடன் 31-8-95 வியாழக்கிழமைக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். இல. 830, மே/மா உதயன், யாழ்ப்பாணம். (38203)

### ஆங்கிலக் கல்வி

வீட்டில் வந்து ஆங்கிலம் படிப்பிக்கப்படும். ஆண்டு 11 முதல் கீழ் வகுப்பு வரை, பாடத்தில் குறைவானவர்களுக்கு அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும். இல. 828, மே/பா உதயன். (38178)

### திருமண சேவை

31 வயது, பரணி, செவ்வாயற்ற கணக்காளருக்கு படித்த மணமகள் தேவை. எம்மிடம் பல தர ஆண், பெண் குறிப்புகள் உண்டு. புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமண சேவை, மல்லாகம். இல. 178, நாவலர் வீதி, பிறவுண் றோட் சந்தி (வேளாண்மைக்கு முன்பு), யாழ்ப்பாணம். [38151]

### மகாதேவா ஜோதிடம்

ஜாதகம், கைரேகை, அதிர்ஷ்ட எண், வீடுபார்த்தல் ஆலோசனைபெற காலை 8-00, மாலை 5-00 மணி வரையும். 140, செல்லர் வீதி, கல்வியங்காடுச் சந்தைக்கு அருகில் சந்திக்கலாம். (38184)

### புத்தகங்கள்

சிவலிங்கபிரஷ்டாவிதி, முப்பொருள் விளக்கம், வைதீக சந்தியாவந்தனா, சிவபூஜாவிதி, விநாயகர் பரத்துவம், மூர்த்தி அலங்காரவிதி, சுப்பிரமணிய ஆலய நித்திய பூஜாவிதி, சைவசித்தார்த்த விதி, வேதாகம நிருபனம், சைவ பிரகாசிகைநாலாம் பதிகம், குமாரசுவாமி நினைவு மலர் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர். (சி-2098)

### மலிவு விற்பனை

சமய நூல்கள், பக்தி இலக்கியங்கள், இலங்கை - இந்திய சஞ்சிகைகள், நாவல்கள் பாடசாலை உபகரணங்கள் யாவும் விற்பனையாகின்றன. ஸ்ரீ காந்த புத்தகசாலை, நல்லூர். [38145]

### புலமைப் பரிசில்

பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிறும் எம்மால் வெளியிடப்படுகின்றன. எமது பயிற்சிகள் மூலம் உங்கள் பிள்ளைகளை பரீட்சையில் வெற்றி பெறச் செய்யுங்கள். Bond 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (8646)

### றோணியோ, தட்டச்சு

தமிழ், ஆங்கில தட்டச்சு றோணியோ வேலைகள் சிறப்பாகச் செய்து தரப்படும். Bond 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [8647]

### மணமக்கள் தேவை

கனடாவிலுள்ள 46, 43 வயது சகோதரருக்கும், 40 வயது சகோதரிக்கும், இங்குள்ள 32 வயது பொறியியலாளருக்கும், 30 வயது டாக்டர் சகோதரிக்கும் மாற்றாகவோ, தனியாக பெண்களுக்கோ மணமக்கள் தேவை. ஐந்து பேரும் ஒரே குடும்பம் கனடாவிலுள்ளவருக்கு வெளிநாட்டில் உள்ளவர் விரும்பத்தக்கது. இல. 831, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (38204)

### மணமகன் தேவை

உதயத்தில் செவ்வாய் உச்சம் கொண்ட பாவம் கூடிய 31 வயது (பரணி) மாதம் 7000/- இங்கு நல்ல கம்பனியில் பல சலுகைகளோடு வேலை செய்யும் அழகிய மணப்பெண்ணுக்குப் பெற்றோர் தகுந்த மணமகனை தேடுகின்றனர். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (38207)

31 வயது, 8இல் செவ்வாய் [கிரகபாவம் 53], மகம் ஆசிரியைக்குப் பெற்றோர் ஒத்து வரக்கூடிய பண்புடைய மணமகனைத் தேடுகின்றனர். தொடர்பு: மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [38208]

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில்! |
|---|---|
| 04 – 12 – 1917 | 18 – 08 – 1993 |

### ஸ்ரீமதி விஸ்வநாதக்குருக்கள் அன்னரத்தினஅம்மா

திதி: 26 – 08 – 1995 (பிரதமை)

ஆண்டு இரண்டு ஆனாலும்
ஆறாது உம்நினைவலைகள்
பாசமும் பரிவும் காட்டிப்
பல கதைகள் சொல்லி எமை
நேசமுடன் வளர்த்த நும்போல்
ஈண்டு எமக்கு நல்லுரைகள்
கூறியே வழிகாட்ட யாருளரே!

உங்கள் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கல்வளைப் பிள்ளையாரை வேண்டுகிறோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கல்வளை,
சண்டிலிப்பாய். (38194)

## கண்ணீர் அஞ்சலி

கிளிநொச்சி மாவட்ட
தேசிய வீடமைப்பு அதிகார சபை
உபவேலைப் பரிசோதகர்
**க. வ. காசிலிங்கம்**
அவர்களின்
மறைவையிட்டு எமது கண்ணீர்ப் பூக்களை
காணிக்கையாக்குகிறோம்.

மாவட்ட முகாமையாளரும்,
ஊழியர்களும்,
தேசிய வீடமைப்பு அதிகார சபை,
யாழ். மாவட்ட செயலகம்.

[38213]

# முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு சமைத்த உணவு

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஏற்பாடு

சென்ற திங்கட்கிழமை வலி.மேற்குப் பகுதியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருப்போருக்கு ஒரு வாரத்துக்கு சமைத்த உணவு வழங்க தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ். செயலகத்தில் அரச அதிபரின் உணவுக் கையிருப்பு முடிவடைந்துவிட்டதால் இடம்பெயர்ந்தவர்களுக்கு சமைத்த உணவு வழங்கமுடியாது என்று பிரதேச செயலர்கள் கைவிரித்து விட்டனர்.

இதனை அடுத்தே தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முகாம்களிலுள்ள இடம்பெயர்ந்தவர்களுக்கு ஒரு வாரத்திற்கான — சமைத்த உணவை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வலி.மேற்குப் பகுதியில் இடம்பெற்ற 'ட்ரகன் பயர்' இராணுவ நடவடிக்கையினால் ஆயிரத்து 463 குடும்பங்கள் புதிதாகத் திறக்கப்பட்ட முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய வட்டாரங்கள் தெரிவித்தன. [ஒ-எ-4]

# குண்டு வீச்சில் பாதிப்புற்ற நவாலி மக்களுக்கு நிதி

யாழ்ப்பாணம், ஓக. 26

நவாலியில் கடந்த ஜூலை மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்ற விமானக் குண்டுவீச்சால் பாதிக்கப்பட்ட நவாலி மக்களுக்கு வழங்குவதற்காக சேகரிக்கப்பட்ட நிதி கடந்த 21 ஆம் திகதி பகிர்ந்து வழங்கப்பட்டது.

நவாலி மக்களின் அன்பளிப்பாகவும் பொது, தனியார் நிறுவனங்கள் மூலமாகவும் சேகரிக்கப்பட்ட இத்தொகை சம்பந்தப்பட்டவர்களின் குடும்ப நிலைப், பாதிப்பின் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டது.

உயிரிழந்த நவாலியூர் வாசிகளின் 44 பேரின் குடும்பங்களுக்கு 76 ஆயிரத்து 500 ரூபாவும், ஊனமுற்ற 5 பேருக்கு 25 ஆயிரம் ரூபாவும், காயப்பட்ட 87 பேருக்கு 65 ஆயிரத்து 250 ரூபாவும் பகிர்ந்து வழங்கப்பட்டது.

நவாலிப் பங்குத் தந்தை அருட்திரு. பொனிபஸ் அடிகள் தலைமையில் மேற்படி செயற்பாடுகள் இடம்பெற்றன. மிதமியாக உள்ள 14 ஆயிரத்து 250 ரூபா காயப்பட்டு பதிவு செய்யப்படாதவர்களுக்கு பகிர்ந்து வழங்கப்படும் எனப் பங்குத் தந்தை தெரிவித்தார். [க-20]

## கல்விக் கழகத்தினால்

# மன்னார், வவுனியாவுக்கு 38 ஆசிரியர்கள் தெரிவு

யாழ்ப்பாணம், ஓக. 26

மன்னார், வவுனியா கல்வி மாவட்டங்களில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க தமிழீழ கல்விக் கழகம் 38 ஆசிரியர்களை நேர்முகப் பரீட்சைமூலம் தெரிவு செய்துள்ளது. இவர்களுக்கான பயிற்சி வகுப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கல்விக் கழக நடுவப்பணியகத்தில் நடைபெறும்.

தெரிவு செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களின் விவரம் வருமாறு!

**விஞ்ஞானம்**

செல்வி புனிதவாணி குமாரதேவன், குணபாலன் சதீஸ்குமார், செல்வி பொன்னையா மங்கயேஸ்வரி, செல்வி அருந்ததி சதாசிவம், முருகேசு இராகுலதாஸ், செல்வி கெங்காதேவி ஆனந்தவடிவேல், குமாரசாமி நிரஞ்சன், செல்வி எ. ஜெ. சுமோதினி சந்தியாப்பிள்ளை, சூ. எட்வின் இருதயராஜா, செல்வி எழிலரசி கனகலிங்கம். செல்வி விஜிதா சுப்பிரமணியம், செல்வி லூட்ஸ் ஜோய்சி பத்திநாதர்.

**கணிதம்**

பொன்னம்பலம் சுஜிந்தன், சின்னத்துரை பிரணவசௌரூபன், பூவையா விமலராஜன், செல்வி பிரமளா ஆறுமுகசாமி, தம்பையா இராமநாதன், கதிர்காமத்தம்பி அகிலராஜன், நாகரத்தினம் கேதாரநாதன், செல்வி மதிவதனி இரத்தினராசா, சிவரத்தினம் அரசரத்தினம், சின்னத்துரை கிருஷ்ணகுமார், மாரிமுத்து கிருஷ்ணமூர்த்தி.

**ஆங்கிலம்**

எஸ். சிவசம்பு, யே. தே. நீதிராஜா, ச. ஜெகநாதன், செல்வி ச. நிலானி அந்தோனிப்பிள்ளை, செல்வி மரியதாஸ் குணரட்ணம் அனுஷா, செல்வி ரேவதி திருஞானசம்பந்தர், செல்வி சத்தியவதனி சிவஞானசுந்தரம், ப. ஜெயக்குமார்.

**சங்கீதம்**

செல்வி மறினா நிரஞ்சினி அந்தோனிப்பிள்ளை, செல்வி பொன்னையா சறோஜினிதேவி, செல்வி கிறிஸ்ரினா ஷாமிளா அருளானந்தம், செல்வி ஜனார்த்தனி ஆறுமுகம்.

**நடனம்**

செல்வி சூ. அன்ரன் யோவனேர்க்கேஸ்.

**சித்திரம்**

செல்வி தயாழினி செல்வரட்ணம், திருமதி விஜயலட்சுமி மனோகரன். (ஐ)

## மொழிபெயர்ப்பாளர் தேவை

ஆங்கிலத்தைத் தமிழிலும், தமிழை ஆங்கிலத்திலும் இலகு நடையில் மொழி பெயர்க்கக் கூடிய இருமொழித் தேர்ச்சி பெற்ற போதிய அனுபவம் உடையோர் சகல சான்றிதழ்களுடனும் 31 – 08 – 1995 அன்று காலை 10-00 மணிக்கு நேர்முகத் தேர்விற்கு நேரில் சமுகந்தரவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

"நந்தவனம்"
நவாலி வீதி, ஆனைக்கோட்டை,

[38205]

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## அச்சுறுத்தலும் திருகுதலும்

இராணுவ அச்சுறுத்தல், பொருளாதாரத் திருகுதல் இல்லாதிருந்தால் மட்டுமே, அரசாங்கம் முன்வைத்துள்ள இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு யோசனையை வடக்கு–கிழக்கு வாழ் மக்களால் ஆராய்ந்து கருத்துச் சொல்ல முடியும்.

யாழ். பிரஜைகள் குழு ஜனாதிபதிக்கு ஆசப்பிந்தி அனுப்பிவைத்துள்ள மகஜரில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் மக்கள் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை நீக்குவதோடு, அமைதியையும் இயல்பு நிலையையும் உருவாக்கக்கூடிய சூழ்நிலையைத் தோற்றுவிப்பதன் அவசியத்தையும் யாழ். பிரஜைகள் குழு ஜனாதிபதியிடம் வலியுறுத்தி உள்ளது.

அரசு நடத்தும் போர் தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல; விடுதலைப் புலிகளுக்கு எதிரானதே என்று சந்திரிகா அடிக்கடி கூறிக்கொண்டாலும் முற்றிலும் மாறாகவே காரியங்கள் நடக்கின்றன.

போரினூடாகத்தான் சமாதானத்தைத் தோற்றுவிப்பது என்பதே சந்திரிகாவின் நிலைப்பாடு. அந்த முட்டாள்தனமான போக்கை, அவர் மாற்றிக் கொள்வாரா என்பது சந்தேகம் தான்!

அரசாங்கத்தின் தீர்வு யோசனைக்கு மக்களின் சாதக, பாதக கருத்துக்களை அறியும் ஜனநாயக நடவடிக்கையாகவே அதனை மக்கள் முன் வைத்திருப்பதாகவும் —

அந்த வகையில் வடக்கு மக்களுக்கும் தீர்வு யோசனையைக் கிடைக்கச் செய்யப் போவதாகவும் — சந்திரிகா அண்மையில் கூறியிருந்தார்.

தீர்வு யோசனையால் வானத்தைக் கயிறாகத் திரித்துவிடலாம் என்று மற்றவர்களை குறிப்பாக வெளிநாடுகளை நம்பச் செய்யும் முயற்சியில் ஜனாதிபதி வெகு சாதுரியமாகச் செயலாற்றுகிறார்.

அதன் பொருட்டாவது தீர்வு யோசனையை வடக்கே கிடைக்கச் செய்வதற்கு முன்னர் இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மூலம் தமிழ்ப் பொதுமக்களைக் கொன்றொழிப்பதையும், அவர்களை இடம்பெயர வைத்து அவதிப்பட, அவலப்பட வைப்பதையும் நிறுத்தவேண்டும். வடக்கு —கிழக்கில் உள்ள இராணுவ முகாம்களை உடனடியாக அகற்றினால் மட்டுமே தமக்குப் பாதுகாப்பும், நிம்மதியும் வரும் என்று தமிழ் மக்கள் நம்புவார்கள்.

அதே போல தமிழ் மக்கள் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதார, போக்குவரத்து, தபால் தொடர்புத் தடைகளையும் நீக்குவது அவசியம்.

சிங்கள அரசைப் பொறுத்த மட்டில் அதன் அறிவிப்புகள் எதுவும் நடைமுறைக்கு வந்த பின்னரே தமிழர்கள் இனி நம்புவார்கள்.

எனவே தனது தீர்வு யோசனையை தமிழ் மக்கள் படித்துப் பார்த்துக் கருத்துக் கூற வேண்டும் என்று உண்மையாகவே சந்திரிகா விரும்பினால்

— இராணுவ அச்சுறுத்தலையும் பொருளாதாரக் கழுத்துத் திருகுதலையும் உடனடியாக நிறுத்த வேண்டும். செய்வாரா?

# உணவுகப்பல்களுக்கு தொடர்ந்தும் செஞ்சிலுவை பாதுகாப்பு அவசியம்!

## யாழ். வெகுஜன அமைப்புகள் ஜனாதிபதிக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஓக. 26

வடக்கே உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிவரும் கப்பல்களுக்கு கடந்த காலங்களைப் போன்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவே பாதுகாப்பு வழங்கவேண்டும்.

யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்துக்குத் தேவையான போதியளவு அத்தியாவசிய உணவுப் பொருள்கள், மருந்து என்பனவற்றை கப்பல் மூலமாகவும் தரைமார்க்கமாகவும் உடன் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறும் —

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தால் கப்பல் மூலமாக அனுப்பப்படும் உணவுப் பொருள்கள் யாழ். மாவட்ட மக்களின் நுகர்ச்சித் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாதுள்ளது.

எனவே கூட்டுறவு தனியார் துறையினர் கொழும்பில் இருந்து தாண்டிக்குளம் ஊடாக உணவுப் பொருள்களை எடுத்துவர அனுமதிக்கப்படவேண்டும் என்றும் அக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்கள், மருந்து என்பன அனுப்பி வைக்கப்படவில்லை இதனால் எமது மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இம் மோசமான உணவு நெருக்கடியைத் தீர்த்து வைக்குமாறு கோரி யாழ்ப்பாண மாவட்ட மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் நூற்றுக்கு மேற்பட்ட வெகுஜன அமைப்புக்கள் ஒன்றிணைந்த யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் மகஜர் மூலம் தங்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றது. இம்மகஜரில் குறிப்பிட்ட விடயங்கள் சார்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு மிக வினயமாக வேண்டுகின்றோம்.

தாங்கள் பதவிக்கு வருமுன் தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளை தமிழ் மக்கள் இன்னும் மறந்துவிடவில்லை. தமிழ் மண்ணில் மீண்டும் அமைதி, சமாதானம், இயல்பு வாழ்வுநிலை தோன்றும் என்ற நம்பிக்கை இன்று பொய்த்துவிட்டது.

சமாதானத்தை விரும்பிய தாங்கள் திடீரென மாறி போர் எண்ணங் கொண்டு அப்பாவித் தமிழ் மக்கள் மீது தாக்குதலைத் தொடுத்திருப்பது மிகுந்த வேதனையைத் தருகின்றது இது மனித நேயமற்ற ஒன்றாகும். இது சாதாரண பிரஜை மீது தொடுக்கும் ஈவு இரக்கமற்ற கொடூரமான செயலாகும். இது தங்களது அரசியல் வாழ்வில் சிந்திக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இன்னும் காலம் கடந்துவிடவில்லை.

தமிழ் மக்களின் நியாயபூர்வமான இன நெருக்கடிக்கு இராணுவ ரீதியாக தீர்வு காணமுடியாது என்ற வரலாற்று உண்மையை தாங்கள் ஜீரணித்தே ஆக வேண்டும்.

இந்நாட்டில் அமைதி, சமாதானம், அரசியல் தீர்வு கிடைக்க வேண்டுமென நாம் பெரிதும் பாடுபட்டோம். இதற்காக அயராது உழைத்தோம் ஆனால் அது கைகூடாமல் போனது துரதிஷ்டவசமானதே கொந்தழிக்கும் எமது மக்களின் உள்ளக்குமுறல்களின் வெளிப்பாடாக லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் ஒன்றுதிரண்டு யாழ்.நகரில் பல பேரணிகளை நடத்தி தங்களுக்கு மகஜர்களை அனுப்பியிருந்தோம். அதில் எமது கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. ஆனால் தாங்கள் எமது கோரிக்கைகளைச் செவிமடுத்து ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எதையும் எடுக்கவில்லை என்பதை மிகவும் வேதனையுடன் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

நாம் அனுப்பிவைத்த மகஜர்களின் மீது தாங்கள் உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் இன்று இந்த நாட்டில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்பட்டு இரத்தக்களரி ஏற்பட்டிருக்காது. பெரும் அழிவும் ஏற்பட்டிருக்காது.—என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

# உணவு, மற்றும் அத்தியாவசிய சேவைகள் மோசமான நிலையில்

## திட்டப்பணிப்பாளர் அரச அதிபருக்கு தகவல்

யாழ்ப்பாணம், ஓக. 26

''யாழ் மாவட்டத்தின் உணவுப் பொருள் விநியோகம் மற்றும் அத்தியாவசிய சேவைகள் மோசமான நிலையை அடைந்துள்ளன. அவற்றை சீர் செய்ய உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்''

இப்படியான அவசர கோரிக்கை ஒன்றை செயலக திட்டப் பணிப்பாளர் செ. பத்மநாதன் கொழும்புக்கு நேற்று அனுப்பியுள்ளார்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு மூலமாக கொழும்பில் தற்சமயம் தங்கியுள்ள யாழ். அரச அதிபருக்கு அனுப்பப்பட்ட அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு:-

★ உணவு நிலைமையில் எதுவிதமாற்றமும் இல்லை. மோசமான நிலையை அடைந்துள்ளது.

★ ஏற்கனவே இடம்பெயர்ந்த 57 ஆயிரத்து 600 குடும்பங்களுக்கு 72 நாள்களாக நிவாரணம் வழங்கப்படவில்லை.

★ ''முன்னேறிப் பாய்தல்'' நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்த 11 ஆயிரத்து 396 குடும்பங்களுக்கு ஒருவார நிவாரணமே வழங்கப்பட்டது அவர்களின் வாழ்க்கை நிலை மிக மோசமாக உள்ளது

★ கடந்த மூன்று மாதங்களில் ஆயிரத்து 600 பரல் மண்ணெண்ணெய் மட்டுமே இங்கு வந்தது. வெளிச் சந்தையில் மண்ணெண்ணெய் விலை ஏறுகிறது. ஜூலை, ஓகஸ்ட் மாத மண்ணெண்ணெய் கோட்டா இதுவரை வந்து சேரவில்லை.

★ உரம் இல்லாத காரணத்தால் பெரும் போக விவசாயத் திட்டத்தைச் செயற்படுத்த முடியவில்லை.

★ வரணியில் உள்ள 7 பாடசாலைகளில் இடம் பெயர்ந்தோர் தங்கியுள்ளனர். அவர்களுக்கு வீடு அமைத்துக் கொடுக்க நிதி பெற்று அனுப்பவும்.

★ ''முன்னேறிப்பாய்தல்'' நடவடிக்கையில் கொல்லப்பட்டவர்களில் 150 பேரின் குடும்பங்கள் நஷ்டஈடு பெற்றுத் தருமாறு வற்புறுத்துகிறார்கள்.

இப்படி அரச அதிபருக்கு அனுப்பப்பட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-4)

## சீன மாநாட்டுக்கு யாழ். பெண்கள்

யாழ்ப்பாணம், ஓக. 26

சீனாவின் பேசிங் நகரில் அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ள நான்காவது அனைத்துலக மகளிர் மாநாட்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நால்வர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மகளிர் அபிவிருத்தி நிலையத்தைச் சேர்ந்த திருமதி. சரோஜா சிவச்சந்திரன், திருமதி பத்தினியம்மா திலகநாயகம், திருமதி. புஷ்பா கணேசலிங்கம், திருமதி. கோகிலா மகேந்திரன் ஆகிய நால்வருமே மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இங்கிருந்து சென்றுள்ளனர்.

ஐ. நா. சபையின் அனுசரணையுடன் நடைபெறும் இந்த மாநாட்டில் தமிழ்ப் பிரதேசத்தை பிரதிநிதித்துவப் படுத்துவோர் கலந்து கொள்வது இதுவே முதல முறை எனத் தெரிவிக்கப்பட்டது. [ஐ]

## கால்நடை வளர்ப்பு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக. 26

வடமராட்சி அரிமாக் கழகத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் விவசாயம், கால்நடை வளர்ப்பு தொடர்பான கருத்தரங்கு நாளை காலை 9 மணிக்கு புலோலி மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவிருக்கிறது.

அரிமாக்கழக உபதலைவர் ஆ. சிவசுவாமி தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் ''அனர்த்த காலமும் விவசாய புனரமைப்பும்'' என்ற தலைப்பில் புலோலி விவசாயப் போதனாசிரியர் சி. இ. பசுபதியும் —

''அனர்த்த காலமும் கால்நடைவளர்ப்பும்'' என்ற தலைப்பில் கால்நடை வைத்திய கலாநிதி பொ. இராமநாதனும் —

''அனர்த்தகால விவசாய நடவடிக்கைகள்'' என்ற தலைப்பில் இளைப்பாறிய உதவி விவசாயப் பணிப்பாளர் பொன். மாணிக்கவாசகரும் — கருத்துரை வழங்குவார்கள். [இ-8]

# கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீட விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன

## யாழ். மாணவர் பதிய வசதி

யாழ்ப்பாணம், ஓக. 26

1992, 93 ஆம் வருடங்களில் ஜி. சீ. ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி, கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடத்துக்குத் தெரிவான மாணவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் பதிவு செய்து வகுப்புகளில் சேர்வதற்கு வசதி செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட இவ்விரு ஆண்டுகளிலும் தோற்றி சட்டபீடத்துக்குத் தெரிவான இரு தொகுதி மாணவர்களையும் இணைத்து ஒரு தொகுதியாக்கி இவர்களுக்கான விரிவுரைகள் தொடங்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகத்திற்கு மாணவர்கள் தெரிவாகி இரு ஆண்டுகளுக்குப் பின்பே அவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பமாவதால் ஏற்படும் வீண் காலதாமதங்களைத் தவிர்ப்பதற்காகவே இந்தஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கொழும்புப் பல்கலைக்கழக வட்டாரங்கள் விளக்கமளித்துள்ளன.

யாழ், குடாநாட்டு தபால் சேவையில் நிலவும் சீரின்மையால் மாணவர்கள் சட்டபீடத்திற்கு பதிவு செய்வதற்கான இறுதித் திகதி, விரிவுரைகள் ஆரம்பமாகும் திகதி என்பன பற்றி பல்கலைக்கழக மானியக்குழுவின் கடிதங்கள் எவையும் இதுவரை குடாநாட்டு மாணவர்களுக்குக் கிடைக்கவில்லை.

இதனால் 92ஆம் ஆண்டு தெரிவான மாணவர்களில் பலரும், 93ஆம் ஆண்டு தெரிவான மாணவர்களும், தமது பதிவை கொழும்பு பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளவில்லை என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது இந்த இரு தொகுதி மாணவர்களையும் இணைத்த தொகுதி [Double Batch] விரிவுரைகள் ஆரம்பமாகிய நிலையிலும் —

குடாநாட்டு தபால்போக்குவரத்து சிக்கல்களைக் கருத்திற் கொண்டு இவ்விரு

[6 ஆம் பக்கம் பார்க்க]

# மரண அறிவித்தல்கள்

## சாந்தினி பஞ்சலிங்கம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் அவுஸ்திரேலியாவில் 21-08-95 இல் இறைபதம் எய்தியுள்ளார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24-08-95 இல் சிட்னியில் நடைபெற்றன.

இவர் சா. பஞ்சலிங்கம் [இளைப்பாறிய உப அதிபர் யாழ்/ சென்யோன்ஸ் கல்லூரி], சிவகாமசுந்தரி பஞ்சலிங்கத்தின் அன்பு மகளும், சுகுமார், நந்தகுமார், சாந்தகுமார், திருக்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

இவ்வறிவித்தலை உறவினர்களும் நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சா. பஞ்சலிங்கம்
[தந்தை]

77, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

[38221]

## பொன்னையா நாகராசா

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பொம்மைவெளி எலுச்சரியம் 18 ஆம் நம்பர் இல்லத்தில் வசித்தவருமான பொன்னையா நாகராசா நேற்றுக் காலமானார்.

இவர் பொன்னையா சின்னப்பிள்ளையின் அன்பு மகனும், கந்தையா தெய்வானைப்பிள்ளையின் அன்பு மருமகனும், சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும், கண்ணம்மா காலஞ்சென்ற சாந்தினிதேவி, மற்றும் ரஞ்சினிதேவி, பாக்கியராஜா, வரதராசா, தவமணிதேவி, கமலாதேவி, செல்வராசா, நந்தினிதேவி, சியாமளதேவி, சித்திராதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், கதிராசியின் அன்பு சகோதரியும், செல்லத்துரையின் மைத்துனரும், சிவகிரி, சண்முகநாதன், செல்லத்துரை, ரதிதேவி, காந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [26-8-95] சனிக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. செல்லத்துரை
(மைத்துனர்)

எலுச்சரியம், அராலி வீதி,
பொம்மைவெளி.

[38224]

## திருமதி பாக்கியம் ஞானப்பிரகாசம்

புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், ஊர்காவற்றுறை கரம்பனில் வசித்தவருமான திருமதி பாக்கியம் ஞானப்பிரகாசம் 24 - 08 - 95 இல் வவுனியாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை - சுபத்திரை தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற ஞானப்பிரகாசத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அமலதாசன், மற்றும், விமலதாசன் [கனடா], மேரி ஜஸ்ரினா [ஜேர்மனி] ஆகியோரின் அன்புத் தாயும், சந்திரா [கனடா], ஜோர்ஜ் (ஜேர்மனி] ஆகியோரின் அன்பு மாமியாரும், பங்கையற்செல்வி, பரமேஸ்வரி, நல்லம்மா [அவுஸ்திரேலியா], கோபாலபிள்ளை [அவுஸ்திரேலியா] ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜபானி, சிந்து ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், இராசநாயகம், இரங்கசாமி, சபாநாயகம், சித்திராங்கனி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை [27-8-95] ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி பங்கயற்செல்வி
இராசநாயகம் [சகோதரி]

70/2, புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

[38225]

## திருமதி சோதிப்பிள்ளை சிவபாலசிங்கம்

பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கில் வசித்தவராகிய திருமதி சோதிப்பிள்ளை சிவபாலசிங்கம் 25-08-95 அன்று காலமானார். இவர் உடுவிலைச் சேர்ந்த சின்னத்துரை, சிவபாலசிங்கத்தின் அன்பு மனைவியும் மனோகரி, இந்திராவின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற அரியராசா [C.T.B] சவுந்தரநாயகம் [இளைப்பாறியகிதர் கச்சேரி, யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி சுசீலா சிவபாலசூரியர் [Canada], திருமதி சகிலா கணேசதாசன் [C T.B], திருமதி சசிகலா விநாயகமூர்த்தி [Canada], கண்ணன் [Canada], திருமதி கண்ணகி பாலகிருஷ்ணன் [Canada], திருமதி அமிர்தா சிறீகுருபரன், குகன் [Holland], சித்திரா, வாசுகி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சரண்ணியா, கவிந்தன், தாரகாவின் அன்புப் பூட்டியும் மயில்வாகனம் [Australia] அன்புச் சகோதரியும், பூபாலசிங்கத்தின் அன்புச்சிறியதாயும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை [26 - 08 - 1995] காலை 9-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், நண்பர்கள், உறவினர்கள். ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
சி. சவுந்தரநாயகம்
(மருமகன்)

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

[38214]

# சங்கானை, சண்டிலிப்பாய், உடுவிலில் பாதுகாப்பு நிதி தொடர்பகங்கள்

யாழ்ப்பாணம், ஓக. 26

சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில் பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள மக்களின் வசதி கருதி தேசிய பாதுகாப்பு நிதி தொடர்பகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

சங்கானை உதவி அரச அதிபர் பிரிவில் — வட்டு. இந்துக் கல்லூரிக்கு அருகில் உள்ள சித்தன்கேணியில் சங்கானை வட்டச் செயலகத்தில் ஞாயிறு, செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில் காலை 9 மணி முதல் 11 மணி வரையும் —

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் — யாழ் சாலை, மூனாம்மனை, மானிப்பாயில்—ஞாயிறு, செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில் பிற்பகல் 3 மணி முதல் 5 மணி வரையும்—

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் — இணுவில், காங்கேசன்துறைச்சாலையில், திங்கள், புதன், சனி ஆகிய நாட்களில் காலை 9 மணி முதல் 11 மணி வரையும்—

புன்னாலைக்கட்டுவன் சாலை, ஏழாலையில் உள்ள சிற்றூர் செயலகத்தில் திங்கள், புதன், சனி ஆகிய நாட்களில் பிற்பகல் 3 மணி முதல் 5 மணி வரையும் — தேசிய பாதுகாப்பு நிதி தொடர்பாக மக்கள் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-3]

## காரைநகரில் சிப்பாய் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஓக. 26

காரைநகரில் உள்ள இராணுவ சிப்பாய் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடி பின் மீண்டும் சென்று சரண் அடைந்த சிப்பாயே கொல்லப்பட்டவராவார்.

இவர் கொலை குறித்து விசாரணை நடக்கிறது. (இ-3)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 26

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவுக்காக தென்மராட்சி, தீவக வலய உதைபந்தாட்டச்சங்கம் நடத்திய உதைபந்தாட்டப் போட்டியின் மூன்றாம் இடத்தைத் தெரிவு செய்வதற்கான ஆட்டம் இன்று சனிக்கிழமை சாவகச்சேரி பொதுமைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய ஆட்டத்தில் கிளாலி பண்டிதர் வி. கழகத்தை எதிர்த்து நாவற்குழி வி.க மோதும். (ஐ)

## திருமலையில இராணுவ முகாம் மூடப்பட்டது

திருகோணமலையில் கடந்த திங்களன்று வான்எல பிரதேசத்தில் உள்ள கற்குழி என்ற இராணுவ முகாம் மூடப்பட்டது.

150 சிங்களக் குடும்பங்கள் கொண்ட சிங்களக் குடியேற்றக் கிராமத்துக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக இந்த முகாம் அமைக்கப்பட்டிருந்தது.

இந்தப் பகுதியில் நிலை கொண்டிருந்த ஆயுததாரிகளான 14 ஊர்காவலர்களும் அகற்றப்பட்டுள்ளனர். [இ-3]

## ஐந்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்வனவு செய்யப்படுகின்றன.

புதிதாகக் கொள்வனவு செய்யப்படும் அதிகவேக தாக்குதல் படகுகள் முந்திய "டோறா" ரகப் படகுகளை விட அதிவேகமாக ஓடக் கூடியன என்றும் கூடுதல் ஆயுதங்கள் பொருத்தப்பட்டவை என்றும் அறியப்படுகிறது.

இவற்றை இயக்குவதில் பயிற்சி பெறுவதற்காக ஏற்கனவே ஒரு டசினுக்கும் மேற்பட்ட கடற்படையினர் வெளிநாட்டுக்குச் சென்றுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

கொள்வனவு செய்யப்பட்டுள்ள அதிவேகப் படகுகளும் பீரங்கிக் கப்பலும் எப்போது கொழும்பு வந்துசேரும் என்ற தகவலை வெளியிட பாதுகாப்பு வட்டாரங்கள் மறுத்துவிட்டன. (அ)

## கொழும்பு..

[5 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆண்டுகளிலும் கொழும்பு சட்டபீடத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தங்களை பதிவு செய்து விரிவுரைகளுக்கு சமுகமளிப்பதற்கான காலவரையறை நீடிக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் இருந்து உதயனுக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே இந்த இரு ஆண்டுகளிலும் கொழும்பு சட்டபீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு, இது வரை பதிவு செய்யாத மாணவர்கள் உடனடியாக கொழும்பு பல்கலைக்கழகத்தில் தம்மைப் பதிவு செய்து விரிவுரைகளுக்கு சமுகமளிக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ)

## யாழ் ..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து கேள்விப்பட்டேன்.

இது விடயமாக கொழும்பில் தங்கியுள்ள யாழ். அரச அதிபருடனும், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு செயலாளர் ஜுனைதீனோடும் பேச்சுக்கள் நடத்தி விவரங்களைப் பெற்றேன்.

நேரடியாக இங்குள்ள நிலைமைகளைப் பார்வையிடவும், மக்களின் அவலத்தை நேரில் அறியவுமே இங்கு வந்துள்ளேன்.

அரச அதிகாரிகள், மற்றும் தொண்டர் அமைப்புக்கள், பொது அமைப்புக்களுடன் கலந்துரையாடி உண்மை நிலையை அறிவேன்.

கொழும்பு திரும்பியதும் இங்குள்ள மோசமான நிலை குறித்தும், உணவுத் தட்டுப்பாடு, மக்களின் அவலமான வாழ்க்கை குறித்து நேரடியாக விவரமான அறிக்கையை ஐ. நா. சபையிடம் சமர்ப்பிப்பேன் — என்றார்.

அவர் இன்று அரச அதிகாரிகள், தொண்டர் அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்திப்பதுடன் இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்த பகுதிகள், அகதி முகாம்கள் ஆகியவற்றையும் பார்வையிடவிருக்கிறார். (இ-3)

## கொழும்பு மர்மக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இச் சம்பவங்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள விசேட அதிரடிப்படையினரிடமிருந்து தகவல்களைப் பெறுவது இலகுவானது அல்ல என்றும் —

எனவே விசாரணை மூலம் தகவல்களைப் பெற்றுக் கொள்ள நீண்டகாலம் எடுக்கும் என்றும் —

கொழும்பு பிரதிப் பொலீஸ் மா அதிபர் கொட்டகதெனிய தெரிவித்தார்.

இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்களும் இது தொடர்பாக விசாரணைக்கு உட்படுத்தப்படவிருப்பதாகக் கூறப்படுவதை அவர் மறுத்துள்ளார்.

தெற்கில் பெரும் பரபரப்பையும், தமிழர்கள் மத்தியில் அச்சத்தையும் தோற்றுவித்துள்ள இந்த மர்மக் கொலைகளுடன் விசேட அதிரடிப் படையினர் சம்பந்தப்பட்டிருப்பது தெரியவந்துள்ளமை அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்துவதாக இருக்கும் என்று அவதானிகள் கருதுகின்றனர்.

அரச பிரமுகர்களுக்கும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கும் தெரியாமல் விசேட அதிரடிப்படையினர் எவ்வாறு இத் நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்பது பெரும் புதிராக இருப்பதாக பி.பி.ஸி தெரிவித்தது. (ஐ-6)

# மரண அறிவித்தல்

## தம்பிராஜா பாக்கியராஜா

(லண்டன்)

கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் லண்டனில் வசித்தவருமான ஓய்வு பெற்ற சுகாதார பரிசோதகர் தம்பிராஜா பாக்கியராஜா 07 - 08 - 1995 இல் லண்டனில் காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் (சங்கீத வித்துவான் ஓய்வுபெற்ற விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்) கணவரும், காலஞ்சென்றவர்களாகிய சரவணமுத்து நித்தியானந்தத்தின் மூத்த மருமகனும், ஜெந்தி (இந்தியா), சாந்தி (U. K.), கம்சாநந்தி (U. K.), ஆகியோரின் தகப்பனாரும், சிவானந்தன் (பாரிஸ்), அருளானந்தம் (U. K.), தயாபரன் (U. K.) ஆகியோரின் மாமனாரும், பரமேஸ்வரியின் மைத்துனரும், மீனாட்சிசுந்தரத்தின் சகலனும், சுபாசாமினி (சங்கீத ஆசிரியை நீர்கொழும்பு), அனுஷா, (உதவிக்கணக்காளர் ஞானம்ஸ்), ஜெகரூபி ரூபேந்திரன் (ஜேர்மனி), சரவணபவன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்), சாயிரேகா ஆகியோரின் பெரிய தகப்பனாரும், சாயி பிரகாஷ் சங்கீதசாயினி, அபினாஷ், சஞ்சிசை, திவ்வியன், தனுஷா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 12 - 08 - 95 (சனிக்கிழமை), லண்டனில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மு. மீனாட்சிசுந்தரம்

கே.கே. எஸ். றோட்,
கொக்குவில்.

(38217)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் கானவர் வீதி, 892/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 26 - 08 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.